பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 13 ஐ! அவ்: 5 இதழ்: 73
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-4-77

# தங்கத்துரை ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

திருக்கோணமலை, ஞாயிறு தமிழர் கூட்டணி அபேட்சகராக திருக்கோணமலைக்கு திரு. தங்கத்துரை நியமிக்கப்படாததை ஆட்சேபித்து நேற்று திருமலை வீதிகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்கள்.

ஊர்வலத்தில் கூட்டணிச் செயல் அதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி ஒன்றையும் இழுத்துச் சென்றுர்கள்.

ஊர்வலம், ராஜவரோதயம் வீதிவழியாக மத்திய வீதிக்குச் சென்று திருமலை எம்.பி. திரு. நேமிநாதன் இல்லத்திற்கருகால் முற்றவெளி மைதானத்தைச் சென்றடைந்து அங்கு கொடும்பாவிக்குத் தீமூட்டப்பட்டது.

ஊர்வலம் செல்லும் போது வீதியின் இரு கரையிலும் பெருந்திரளான மக்கள் கூடி நின்று ஆதரவு தெரிவித்தனர்

சுவர்கள், மதில்கள், கட்டிடங்கள் எல்லாம் தங்கத்துரைக்குக்கொடு அல்லது அண்ணன் நேமிநாதனுக்கு கொடு என்று எழுதப்பட்டிருந்தது. பலதுண்டுப்பிரசுரங்க

(2 ம் பக்கம் பார்க்க)

### அபேட்சகர் நியமனத்தில் அதிருப்தி

# கிழக்கிலங்கையில் புதிய கட்சி இன்று உருவாகும்?

## தமிழ் ஈழக் கொள்கையில் போட்டியிடவும் ஆலோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

**தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகர் நியமனக்குழு இதுவரை செய்த முடிவுகளில்:திருகோணமலை, மட்டக்களப்பு, பட்டிருப்பு, பருத்தித்துறை முதலிய தொகுதிகள் பற்றிக் கூட்டணி ஆதரவாளர்கள்மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகுதிமுடிவுகள் பற்றி மறுபரிசிலனை செய்யவேண்டுமெனவும் கோரிக்கை எழுந்துள்ளது.**

இதேசமயம் இன்று மட்டக்களப்பில் கூட்டணிக் கொள்கையைக் கொண்ட புதியகட்சி ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத் தலைமையைக் கொண்ட இப்புதியகட்சி,கிழக்கில் சகல தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்தவும் ஏற்பாடுசெய்து வருகிறது.

டாக்டர் வே. பஞ்சாட்சரம் டாக்டர் சிவஞானம் ஆகியோர் இப்புதிய கட்சியை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இப்புதிய கட்சியில் சேருமாறு கொழும்பு பல்கலைக்கழக மனித பண்பியல் துறைத் தலைவர், விரிவுரையாளர் திரு. ப. சந்திரசேகரத்திற்கும் அழைப்பு அனுப்பபபட்டுள்ளது.

திரு சந்திரசேகரம், பட்டிருப்புத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோருக்குக் கடிதம் எழுதியிருந்தார்

இதே சமயம் பட்டிருப்புத் தொகுதியில் போட்டியிட திருவாளர்கள் வி. பரராஜசிங்கம், வ. ஏரம்பமூர்த்தி, க. லிங்கநாதன், க. கந்தசாமி ஆகியோர் விண்ணப்பித்திருந்தனர். தற்போது இந்தநால்வரும். திரு. சந்திரசேகரத்திற்கு ஆதரவாக விண்ணப்பத்தை வாபஸ்பெற முன்வந்துள்ளனர்.

### இளைஞர் கோஷ்டி கோரிக்கை

திரு. சந்திரசேகரத்தின் ஆதரவாளர்களான இளைஞர் கோஷ்டியொன்று திரு. ஏ. அமிர்தலிங்கத்தைச்சந்தித்துப் பட்டிருப்பிற்கு திரு. சந்திரசேகரத்தை நிறுத்துமாறு [illegible]

அப்போது திரு. அமிர்தலிங்கம அக்குழுவினரிடம் திரு. சந்திரசேகரம் சரியானமுறையில் விண்ணப்பிக்க வில்லையென்று கூறியபோது, 'விண்ணப்பம் செய்யாதவர்களையும்நியமனம் செய்திருக்கிறீர்களே' என்று இளைஞர்கள் கூறினர்களாம்.

கிழக்கில் நியமிக்கப்படும் வேட்பாளர்களை, வடக்கில் உள்ள வேட்பாளர்களைப் போல், கல்வித் தகைமையுள்ளவர்களாக நியமிக்கத்தயக்கமேன் என்றும் இளைஞர்கள் கேட்டதாகவும் திரு. அமிர்த

(2-ம் பக்கம் பார்க்க)

### "கூட்டணிக் குழுவில் 'மாவை'யைச் சேர்க்கவும்"

யாழ்ப்பாணம், திங். தமிழர்விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக்குழுவில் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் மாவைசேனதிராசாவைச் சேர்த்துக்கொள்ளுமாறு கூட்டணித் தலைமைப்பீடத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்றுநடந்த தமிழ் இளைஞர் பேரவை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் நிறைவேறியது.

கூட்டணிக் காரியாலயத்தில் மாவை சேனதிராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவைக்கு நிதி திரட்ட பொருளாளர்களாக திரு. க. பரமசாமி, திரு. மு. சத்தியசீலன், கனகமனோகரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு நிதிதிரட்டும் அதிகாரப் பத்திரங்களை பேரவைத்தலைவர் காசி ஆனந்தனும், மாவை சேனதிராசாவும் கையொப்பமிட்டு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

### சிரிப்புச் சொட்டு



ஒருவர்: அதில் ஒரு பெரும் கூட்டம். எந்தக்கட்சியின் கூட்டம்?
மற்றவர்: படித்தவர்கள் கட்சியின் கூட்டம். பேப்பர் ஒசியில் படிப்பதற்கு பேப்பர் காரனைச் சுற்றி நிற்கிறர்கள்.

- சுந்தர் -

### மூதறிஞர் உடல்நிலை

யாழ்ப்பாணம், திங் மூதறிஞர் செல்வநாயகத்திற்கு நேற்று சிறிது காய்ச்சல் ஏற்பட்டது.

நெஞ்சில் சளியும் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க அளவுக்கு அவரது உடல்நிலையில் மாற்றம் எதுவும் இல்லைஎன ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிததன. (உ)

### "சர்வதேச அரசியலில் இலங்கைப் பிரதமரின்பங்கு"

கொழும்பு, ஞாயிறு 'சர்வதேச அரசியல் அரங்கில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா வகிததுவரும் பெரும் பங்கு பாராட்டுக்குரியது' என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மேற்கு ஜெர்மன் குடியரசு வெளிநாட்டமைச்சர் திரு. கென்ஷர் கூறினர்.

மேற்கு ஜெர்மன் தூதரகத

(8-ம் பக்கம் பார்க்க)

லொறிகள் வாடகைக்குத் தேவை

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து லொறி மூலம் மாமூடைகளை பலாலி, யாழ்ப்பாணம் உணவுக் களஞ்சியங்களுக்கு எடுத்துச்செல்வதற்கு லொறிகள், தேவைப்படுகின்றன. விரும்பியோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

க. ஜெயபாலசிங்கம் அன் கம்பெனி

காங்கேசன் துறை

தொலைபேசி: 34 6009

# ஆசிரிய நியமனம் நூறுவீதம் திறமை அடிப்படையில்!

## மாற்றம் நிகழ்ந்தால் புகார் செய்யவும்

யாழ்ப்பாணம், திங் வடமாகாணத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் உள்ள தொகுதிகளில் ஆசிரியர் நியமனங்கள், நூற்றுக்கு நூறு வீதம் திறமை அடிப்படையிலும், நேர்மையான முறையிலும் நடக்குமென்று கல்வி அமைச்சின் மேலதிகாரிகள், வடபகுதி எம். பி.க்களுக்கு உறுதியளித்துள்ளார்கள்.

தமிழர் விடுதலைகூட்டணி எம். பிக்கள் இதுபற்றி புகார் செய்ததை தொடர்ந்து பிரதமரின் சிபார்சின் பேரிலும் கல்வி அமைச்சரின் வலியுறுத்தலினலும் இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமன விஷயமாக தற்போதைய மட்டுநகர் கல்வி அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் நியமன குழுஒன்று வடபகுதிக்கு வரவிருக்கிறது.

ஒவ்வொரு பகுதிகளுக்கும் வெவ்வேறு, தெரிவு திட்டத்தை வெளிப்படுத்தி அத்திட்டத்தின் கீழ் மட்டுமே நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

உதாரணமாக விஞ்ஞான பகுதிக்கு உயர்தரத்தில் 4 பாடம் இருக்க வேண்டும். 'ஏ' சித்தி-4, 'பி' சித்தி-3, 'சி' சித்தி-2, 'எஸ்' சித்தி-1 என்ற புள்ளிகளை மட்டும் கூட்டி, அந்த தகைமையில் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இதேமாதிரிதான் சங்கீதம், மனையியல், பாடங்களுக்கும், வெவ்வேறு திட்டங்கள் தயாரிக்கப்படருகின்றனவாம்.

தன்னிலும் பார்க்க குறை

(8ம் பக்கம் பார்க்க)

யா/கனகரத்தினம்
மத்திய மகாவித்தியாலயம்

## பகுதி நேர தொழில் நுட்ப வகுப்புகளுக்கான அனுமதி 1977

கீழ்க்குறிப்பிடப்படும் பகுதி நேர தொழில் நுட்ப வகுப்புகள் 5-5-77 மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும். இவ்வகுப்புகளில் சேர விரும்பும் பாடசாலையை விட்ட மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 28-4-77க்கு முன் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ஷை வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. இயந்திரம் பழுதுபார்த்தல்
2. மரவேலை (உருவங்கள் செதுக்கல்)
3. மனையியல் (ஜாம், ஜெலி முதலியன தயாரித்தலும் பாதுகாத்தலும்)
4. பற்றிக் சாயமிடலும், அச்சடித்தலும்

அதிபர்.
6008

### ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. எம். பி. / 15090
கொக்குவில் ஸ்ரேசன் ரேட், பொன்னம்பலம் குமாரநாதன்
வழக்காளி

எதிராக

மானிப்பாய் வடக்கு இராஜகாரியர் லேன்
1. டியூக் அல்பேட் திருநேசசிங்கம் யோசேப்பும்
2. மனைவி ஞானசிகாமலர்
எதிராளிகள்

எம். பி. / 15090-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1977-ம் வருஷம் மே மாதம் 17-ந் திகதி (17-5 77) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

முதில்வட்டி 15,500/- ரூபாவும் மேலும் இதில் 15,000/- 29-10-1975 தொடக்கம் முழுத்தொகையை வழக்காளியின் திருப்திக்குக் கொடுக்கும்வரை வருடமொன்றுக்கு 24% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 631-09 சதம். பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை ''எட்புளியடியும் மென்னியார் பட்டியும்'' நிலப்பரப்பு 2, குளி 15·35 இதிலும் வடக்கெல்லையாகவுள்ள அம்பலவி கணபதிப்பிள்ளைக்குரிய காணியிலுமிருக்கும் ⅓ கிணற்றிலரைவாசியும், கல்வீட்டு அத்திவாரமும் எல்லை கிழக்கு கணபதி சின்னத்துரைக்கும் மேற்கு இராமலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள் வடக்கு அம்பலவி கணபதிப்பிள்ளைக்கும் ஆறுமுகம் தம்பிராசா பெண் பவளரத்தினத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்,
விலைமதிப்பாளர்,
ஏல விற்பனையாளர்.

''இராசகிரி'',
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
5989

## செல்வா குணமடைய பிரார்த்தனை

நெல்லியடி, ஞாயிறு

யாழ். அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்றுவரும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குணமடையவேண்டி தும்பளை லூர்துமாதா கோவிலில் விசேட திருப்பலி பூஜை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தும்பளை சென்மேரிஸ் இளைஞர்மன்றச் செயலாளர் திரு. எம். ஜே. நவரத்தினத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இத் திருப்பலிப்பூஜையை பருத்தித்துறை பங்குக்குரவர் திரு. ஏ. சி. கிறிஸ்தோபர் ஒப்புக் கொடுத்தார். (அ)

### கேள்வி விளம்பரம்

1977ம் ஆண்டு வைகாசி மாதம் பதினொராந்திகதி (11-5-77) புதனகிழமைகாலை 9-30 மணிவரையும் வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் கொந்தராத்துக்காரரிடமிருந்து கீழ்க்குறிக்கப்படும் வேலைகளுக்கு சீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 10-5-77ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஒவ்வொருவேலைக்கும் ரெண்டர்ப் பணமாக தலா ரூபா 25உம் ஒவ்வொரு வேலைக்குரிய ரெண்டர்ப் பத்திரப்பணமாக தலா ரூபா12உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

#### வேலைகளின் பெயர்

1. இருத்தலடிவீதி (பகுதி)
2. தாவளை வீதி.
3. சிவன்கோவிலடி வீதி.
4. அடைக்கலந்தோட்டம்-சங்கரத்தை வட்டுக்கோட்டை வீதி.

நா- அமிர்தலிங்கம்,
தலைவர்,
கிராமசபை,
வட்டுக்கோட்டை.

கிராமசபை - அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
21-4-77. 5993

# மறுமதிப்பீடு

ரூபாயின் புதிய மதிப்பீடு காரணமாக கீழே குறிக்கப்பட்டிருக்கும் விவசாய மருந்துவகைகள், காணப்படும் விலைப்பட்டியல் முறைப்படி விற்கப்படும்:

### விலைப் பட்டியல்

| | அளவு | தற்போதைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| அன்றக்கோல் | 500 கிறும் | 29-50 | 27-75 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 1, 250-00 | 1, 164-50 |
| மொறெஸ்டான் W. p. | 100 கிறும் | 13-50 | 12-75 |
| ,, ,, | 20 கிறும் | 26-00 | 24-50 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 2, 250-00 | 2, 062-50 |
| றைபூனில் | 100 கிறும் | 15-00 | 14-25 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 2, 900-00 | 2, 715-75 |
| சென்கர் W. p. 70% | 100 கிறும் | 37-50 | 35-40 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 7, 800-00 | 7, 285-25 |
| சொசான் உலர் | 20 கிறும் | 1-75 | 1-70 |
| ,, ,, | 1 றுத்தல் | 19-50 | 18-35 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 880-00 | 822-50 |
| செரசான் (ஈரம்) | 20 கிறும் | 2-00 | 1-90 |
| ,, ,, | 1 றுத்தல் | 21-75 | 20-20 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 1, 170-00 | 1, 093-50 |
| பேதியோன் ஈ. சி. 50% | 450 எம். எல். | 70-00 | 65-80 |
| ,, ,, | 25 லீட்டர் | 3, 480-00 | 3, 247-50 |
| டையுரேன் 80% | 1 றுத்தல் | 35-00 | 32-50 |
| ,, ,, | 25 கிலோ கிறும் | 1, 800-00 | 1, 663-75 |
| பொஸ்டொக்சின் வில்லைகள் | ஒன்று | -85 | -80 |
| ஹினோசான் ஈ.சி. 50% | 100 எம். எல். | 15-00 | 14-05 |
| ,, ,, | 200 எம். எல். | 28-50 | 26-65 |

## ஹேகெம் லிமிட்டெட்,

400, டின்ஸ் வீதி — கொழும்பு - 10.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், டேவிற் ரேட், 63 ம் நம்பர் வீட்டுடன் 1¼ பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; வே. ஐயாத்துரை, 348, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 6012

### தேவை

கார் சாரதி தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராகவும், வீட்டிலேயே தங்கக்கூடியவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. நற்சான்றுகளுடன் நேரில் வரவும்: ஆர். எஸ். அச்சகம், யாழ்ப்பாணம். 6006

நெசவு வேலைக்கு அனுபவம், அனுபவமில்லாத பெண்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: துளசிதாசன், 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5997

பளையில் தனியார் கருப்பட்டி நிலையத்திற்கு சீவல் தொழிலாளர்கள் உடன் தேவை. தொடர்புகொள்ளவும்; துளசிதாசன்,76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.5996

கொழும்பிலுள்ள பிரபல கைத்தொழில் நிறுவனமொன்றிற்கு கற்பூரம் செய்வதிலும் பைக்கற் பண்ணுவதிலும் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நேரில் வரவும். சட்டநாதன் அன் கொம்பனி, 79, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 6011

### பயிற்சி

வெல்டிங்,வயறிங்,றேடியோ மேல்நாட்டு முறையில் காலை பிற்பகல், மாலைநேரப் பயிற்சிகள் NIET, 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5931

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### ஒட்டுசுட்டானில் பால் சேகரிக்கும் நிலையம் அமைத்தல்

விவசாயசேவை நிலையங்கள், கிராமமுன்னேற்றச்சங்கங்கள், ப. நோ. கூ. சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்தும் ரூபா 50,000/-க்கு அங்கிகரிக்கப் பெற்றஅரசாங்கஒப்பந்தகாரர்களிடமிருந்தும் 31-5-1977 காலை 10 மணி வரை மேற்படி நிலையம் அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். மீளப் பெற முடியாத பத்திரப்பணமாக ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். உறையின் இடது மூலையில் ''பால் சேகரிக்கும் நிலையம் அமைத்தல்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஒப்பம்
க. தேவசிகாமணி,
தலைவர்,
வவனியா வடக்கு அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்,
முல்லைத்தீவு.

பெரும்பாகக் கச்சேரி,
முல்லைத்தீவு,
21-4-1977. 6010

### இழக்கிலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் அதற்குப்பதிலளிக்கவில்லையென்றும் தெரியவருகிறது.

பட்டிருப்புத் தொகுதியில் திரு. சந்திரசேகரத்தைச் சுயேச்சையாகப் போட்டியிடுமாறு இளைஞர் பேரவையினர் கோரியுள்ளனர். இதுபற்றி திரு. சந்திரசேகரம் இன்னும் முடிவுசெய்யவில்லை.

#### சத்தியாக்கிரக ஏற்பாடு

பருத்தித்துறைத் தொகுதி அபேட்சகர் நியமனம் பற்றியும் இளைஞர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இன்று ஆட்சேப ஊர்வலம் ஒன்றை நடத்தவும் சத்தியாக்கிரகம் செய்யவும் இளைஞர்கள் ஏற்பாடுசெய்துள்ளனர். நியமனத்தை ஆட்சேபித்து பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் அபேட்சகர்களாக திரு. இராசதுரையையும், கவிஞர் காசிஆனந்தனையும் நியமித்ததையிட்டு இளைஞர்பேரவையினர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இவர்களில் ஒருவரை பொத்துவில் தொகுதியில் நிறுத்துமாறு நியமனக்குழுவிடம்கோரவிருப்பதாக தெரியவருகிறது.

நியமனக்குழு முடிவுபற்றி, திருமலை எம். பி. திரு. ப. நேமிநாதன், மட்டுநகர்எம். பி. திரு. இராசதுரை ஆகியோர் கருத்துக்கூறமறுத்துவிட்டனர் இருவரையும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜனுப்மௌசூர்மௌலானா சந்தித்து கலந்துரையாடினர். (க)

### தங்கத்துரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

''பழையவர்களைப் பகைக்காதே புதியவருக்குக் கொடுக்காதே'' என்ற சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. ,திருமலைநியமனத்தைமீண்டும் பரிசீலனைசெய்யுங்கள்' என்ற சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

திருமலை எம். பி. திரு.நேமிநாதன், கொழும்பிலிருந்து தமது ஆதரவாளர்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு 'கட்சிமுடிவுக்கு கட்டுப்பட்டு அமைதியாக இருங்கள் நேரில் வந்து ஆலோசித்துமுடிவு எடுப்போம்'' என அறிவித்துள்ளார். இதனால் திரு. நேமிநாதனின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை.

திருமலைக்கு வரும் திரு. தங்கத்துரைக்கு பலத்த வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுயேச்சையாகப் போட்டியிடுமாறு தங்கத்துரையிடம் கோரும் தீர்மானங்கள் இளைஞர் பேரவை கிளைகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(க-அ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## மரண அறிவித்தல்

### ச. வே. அருணசலம்

திருநெல்வேலி வடக்கு ச வே. அருணசலம் அவர்களின் மரணக்கிரியைகள் முன் அறிவித்தல் தந்தபடி 25-4-77 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர்களும் அன்பர்களும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

6013 தகவல் தருபவர்: அ. நமசிவாயம்



# 'மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம்'

# நெடுஞ்செழியனின் புதிய கட்சிப் பெயர்!

## கருணாநிதியைக் கண்டித்து தீர்மானம்

சென்னை, ஏப். 24

**திராவிடமுன்னேற்றக்கழகத்திலிருந்து வெளியேறிய கழகத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியனும் அவருடன் வெளியேறிச் சென்ற மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சிலரும் ஆரம்பித்துள்ள புதிய கட்சிக்கு 'மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.**

இக்கழகத்தின் தற்காலிக பொதுச்செயலாளராக திரு. இரா. நெடுஞ்செழியனே இருப்பார். மற்றும் நான்குபேர் செயலாளர்களாக இருப்பார்கள்.

நாட்டின் ஒருமைப்பாடு, திராவிடக்கலாசாரப் பாதுகாப்பு ஆகியவைகளைக் கொள்கைகளாகக்கொண்ட மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கு கோரும்.

அண்ணாவின் கொள்கையையும் இலட்சியத்தையும் மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம் பின்பற்றும் என்று அறிவிக்கப்படுகிறது.

### கருணாநிதிமீது கண்டனம்

கலைஞர்கருணாநிதிமீதுகண்டனம்தெரிவித்து மக்கள்திராவிட முன்னேற்றக்கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.



கருணாநிதியின்போக்கை ஆதரிக்காதவர்கள்மீது வன்முறை ஏவிவிடப்பட்டதாகவும் அண்ணாவின்கொள்கைக்கும் இலட்சியத்துக்கும் மாறுக கருணாநிதி நடந்துகொண்டார் என்றும் கழகத்தைத் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்தினாரென்றும் மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம் கண்டனம் தெரிவித்தது. கருணாநிதி தமது சொந்தநிதியைப் பெருக்கிக்கொண்டாரென்றும் தமக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டி நடந்துகொண்டார் என்றும் கருணாநிதிமீது புதிய கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈ. வெ. ரா. பெரியார் தலைமையிலான திராவிடக்கழகத்திலிருந்து பிரிந்து அமரர் சி.என். அண்ணாதுரை திராவிடமுன்னேற்றக்கழகத்தை அமைத்தபோது காலஞ்சென்ற ஈ. வெ. கி. சம்பத், திரு. இராநெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, கண்ணதாசன் ஆகியோரும் ஒன்று சேர்ந்திருந்தனர்.

திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து அண்ணா உயிருடனிருக்கும்போதே பிரிந்து சென்ற ஈ. வெ. கி. சம்பத்தும் கவிஞர் கண்ணதாசனும் தமிழ்த் தேசியக்கட்சி ஒன்றை அமைத்தனர். ஆயினும் பின்னர் அது இயங்கவில்லை. அவர்கள் பழைய காங்கிரஸில் சேர்ந்தனர்.

கலைஞர் கருணாநிதியுடன் வேறுபட்ட எம். ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார். பின்னர் அதை அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் எனப் பெயர் மாற்றினார். எம். ஜி. ஆருடன் வேறுபாடு கொண்ட கோவை செழியன் பிரிந்து சென்று அண்ணா தி. மு. கழகம் ஆரம்பித்தார்.

இப்போது கலைஞரின் தி. மு. கழகத்திலிருந்து வெளியேறிய இரா நெடுஞ்செழியன் 'மக்கள் திராவிட முன்னேற்றக்கழகம்' என்று புதியகட்சி ஆரம்பித்திருக்கிறார்,

## நெடுஞ்செழியன் விலகல்: பொதுக்குழு ஆராய்கிறது

சென்னை, ஏப். 24

தஞ்சாவூரில் இன்று கூடிய தி.மு. கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தற்பொழுது கழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிபற்றி ஆலோசிக்கப்பட்டது. இரு தினங்களுக்கு பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

இரகசியமாக நடைபெற்ற இக்கூட்டத்தில் சுமார் 600 பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர், விசேஷ அழைப்பாளர்களாக 100 பேரும் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் சாதிக் பாட்சா, அன்பழகன், மன்னை நாராயணசாமி, ஓ.பி.ராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கழகத்தின் பொதுச்செயலாளராகவிருந்து ராஜினாமா செய்துள்ள திரு. இரா.நெடுஞ்செழியன் விவகாரம் கூட்டத்தில்விவாதிக்கப்பட்டது.

கழகத்தின் அமைப்பு விதிகளை மாற்றுவது தொடர்பாகவும், லோக்சபா, தேர்தலில் ஏற்பட்டுள்ள தோல்வி, எதிர்வரும் சட்டசபை தேர்தல் ஆகிய விஷயங்களும் ஆலோசிக்கப்பட்டன.

குடியரசுத்தலைவர் பக்ருதீன் அலி அகம்மது, ஈ. வி. கே. சம்பத், சிட்டிபாபு எம். பி. ஆகியவர்களின் மரணத்திற்கு பொதுக்குழுக்கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதாக திரு. கருணாநிதி பின்னர் நிருபர்களிடம் கூறினார்.

திரு. கருணாநிதியின் எதேச்சாதிகாரப்போக்கின் காரணமாக தமது சுயகௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் முகமாகவே கழகத்திலிருந்து விலகி தாம் புதியகட்சி ஆரம்பித்ததாக திரு. நெடுஞ்செழியன் இன்று கூறினார்.

## பாக். ஆர்ப்பாட்டங்கள் மேலும் பலியெடுக்கின்றன

கராச்சி, ஏப். 24

பாகிஸ்தானில் நேற்றும் அதற்கு முந்திய தினமும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது இறந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆகி உயர்ந்துள்ளது.

கராச்சி மற்றும் பெரிய நகரங்களில் நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோது மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

ஜனாப் பூட்டோவைப் பதவியிலிருந்து இறங்கும்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். பாகிஸ்தானில் இப்போது அதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ராணுவச்சட்டத்துக்கும் முன்னர் முன்பு அமுலில் இருந்த ராணுவச் சட்டத்துக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதாக புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் கூறினார். இப்போது அமுலில் உள்ள ராணுவச் சட்டத்துக்கு அரசியல் சட்டத்தில் அங்கீகாரம் இருக்கின்றது என்றும் ராணுவச்சட்டம் பிரதமமந்திரியின் அதிகாரத்தின் கீழேயே செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவச்சட்டம் அமுலிலிருக்கும் பிரதேசங்களில் பத்திரிகைத தணிக்கை அமுல் செய்யப்பட்டுள்ளது.

## கடலில் எண்ணைக் கிடங்கு வெடித்ததால் ஆபத்து

லண்டன், ஏப். 24

வடகடலில் எண்ணைக்கிடங்கொன்றில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக பெருமளவில் எண்ணை கடலின்மேற்பரப்பில் மிதக்கத் தொடங்கியுள்ளது.

வெடிப்பின் காரணமாக மணிக்கு பல ஆயிரம் தொன் எண்ணை சிறிப்பாய்ந்துகொண்டிருக்கிறதாம். நோர்வேஜிய துறைமுகப்பிரதேசம் நோக்கி எண்ணை கடல் மேல்பரப்பில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதில் தீப்பற்றிக் கொண்டால் பலத்தசேதம் ஏற்படுமென்று அஞ்சப்படுகின்றது.

சர்வதேச உதவிக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பல பிரிட்டிஷ் ரோயல் கப்பல்கள் உதவிக்குவிரைந்துள்ளன.

அமெரிக்க-சோவியத் கப்பல்களும் உதவிக்கு வரவிருக்கின்றன.

வெடிப்பிலிருந்து பாயும் எண்ணைக் கசிவை இன்னும் இரண்டு நாட்களில் அடைத்து விடமுடியும் என்றுநிபுணர்கள் கருதுகின்றனர். (உ)

## பாகிஸ்தானில் செய்தித்தணிக்கை

ராவல்பிண்டி, ஏப். 24

பாகிஸ்தானில் பத்திரிகை செய்தித் தணிக்கை அமுலாக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பியக்கங்கள் தொடர்பான செய்திகள் வெளியிடப்படக்கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ராணுவச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதின் பின் நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

......

## 750 நடுவர்கள் தெரிவு

மாஸ்கோ, ஏப்.24

சோவித்யூனியனில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் நடுவர்களுக்கான போட்டியில் 20 விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த 750நடுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாஸ்கோவில் 1980 ல் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்காக இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொண்ட 3500 நடுவர்களில் இரண்டில் மூன்றுபங்கினர் சோவித யூனியனைச் சேர்ந்தவர்கள். (இ)


# தலை போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின்
தாய்மார்களுக்கு அப்படித்தான்...
ஆனல் கெமெக்ஸீனைப் பற்றிக்
கேள்விப்பட்டிருந்தால்
அப்படியிருக்கத்தேவையில்லை.
தலைப்பேனை முற்றுக ஒழிக்க
துரிதமான, நம்பிக்கையான வழி
அதுவே. உங்கள் பிள்ளைகளின்
தலையில் கெமெக்ஸீனை ஒரு
தடவை உபயோகித்தாற் போதும்.
பேன் முற்றுக அழிந்துவிடும்,
மீண்டும பேன் வராமல் தடுப்பதற்கு 3
வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள் கெமெக்ஸீன் பாதுகாப்பானது,
புண்படுத்தாதது, இதமான வாசனையுடையது.

கெமிகல் இன்டஸ்றீஸ்
(கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

## மணிவாக்கு

இங்கு மனிதருக்கிடையில் அல்லது இரு சன சமூகங்களுக்கிடையிலுள்ள கருத்து வித்தியாசங்களாகிய சிறுகுடாவைக் கடப்பதைப் பார்க்கிலும், இரு தேசங்களுக்கிடையிலுள்ள பெருஞ்சமுத்திரத்தைக் கடப்பது இலகுவானது.
—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

# ஒற்றுமை குலையக்கூடாது!

தேர்தல் வந்தாலே பிரச்னை தான். தேர்தலுக்குத் தேதி நிர்ணயிப்பதற்கு முன்னரே பிரச்னைகள் தலைதூக்கத் தொடங்கிவிட்டன.

கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் எழுவது இயல்பு. அவற்றை அமைதியான முறையில் கட்சிக்குள்ளேயே பேசித்தீர்த்துக் கொள்வது பண்பு.

எல்லாக் கட்சிகளுக்குள்ளும் கருத்துவேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும்.

அதுவும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதென்பது சுலபமான விஷயமல்ல.

கட்சியில் சேர்ந்து கட்சிக்காக உழைக்க முன்வருபவர்கள் எல்லோருமே கட்சியின் நலனையும் நாட்டின் நலனையும் மட்டுமே கருத்தில் கொண்டுள்ளவர்கள் என்று சொல்லிவிடமுடியாது.

பாராளுமன்றத்தில் என்றைக்காவது இருக்கவேண்டுமென்ற ஆசையில்லாமல் கட்சிகளில் சேர்ந்து மக்கள் தொண்டுசெய்ய முன்வருவோர் எத்தனைபேர்?

பாராளுமன்றத்துக்குச் சென்று மக்கள்பணி செய்ய வேண்டுமென்று நினைப்பது பாபமல்ல; தவறுமல்ல!

ஆனால் பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட தொகையான ஆசனங்களே இருக்கின்றன.

நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து குறிப்பிட்ட தொகையான பிரதிநிதிகளையே தெரிவு செய்து அனுப்பமுடியும்.

இந்நிலையில் கட்சிகளில் சேர்ந்து உழைத்த எல்லோருமே பாராளுமன்றத்துக்குச் செல்லவேண்டுமென்று நினைத்தால் அது நடைபெறக்கூடிய விஷயமல்ல.

தேர்தல் காலத்தில் வேட்பாளர் தெரிவில் கட்சிகளுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படுவதும் சிலர் ஒரு கட்சியிலிருந்து வெளியேறி வேறு கட்சியில் சேர்வதும் மற்றும் சிலர் சுயேச்சையாகத் தேர்தலில் போட்டியிடுவதும் வழக்கம்.

தேர்தல்முடிந்தபின் பிரிந்தவர் கூடுவதுமுண்டு.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மக்களுக்குக்குறைகள் நிறையஉண்டு.

இவற்றை நீக்கி, தமிழ்மக்கள் உரிமையுடன் வாழவேண்டுமென்பதில் தமிழ் மக்கள் மத்தியில் கருத்து வேற்றுமை கிடையாது.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அவர்கள் ஒற்றுமைப்படவேண்டியது அவசியம். தலைவர்கள் ஒன்று சேர்ந்தால் ஒரேஇயக்கத்தின்கீழ் மக்களை ஒன்று சேர்த்துவிடலாமென்று கருதிய சிலர் பெரும் முயற்சி செய்து சில கட்சிகளை ஒன்று சேர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினர்.

எல்லோரையும் ஒன்று சேர்க்க முடியவில்லையாயினும் பெருமளவில் ஒற்றுமையேற்பட்டது.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு 'தமிழ் ஈழம்' மீண்டும் உருவாக வேண்டுமென்பதே கூட்டணியின் இலட்சியம்.

இந்த இலட்சியத்தை வைத்தே இத்தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிபீடத்துக்கு தமிழ்மக்களின் அபிலாசையைஎடுத்துக்காட்ட கூட்டணி முன்வந்தது.

இதுதான் அதன் நோக்கமும் ஆகும்.

இப்போது வேட்பாளர் தெரிவில் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது தமிழ்மக்கள் வேதனையடையாமலிருக்கமுடியாது.

தமிழ்மக்களின் ஒற்றுமை சீர்குலைந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஆர்ப்பாட்டங்கள், மறியல், சத்தியாக்கிரகம், கொடும்பாவி கொளுத்துதல் போன்ற செயல்கள் தமிழ் மக்களுக்கு வேதனையளிக்கும் செயல். பிறர்பார்த்துச் சிரிக்கவைக்கும் நடத்தை.

தமிழ் மக்களின் குறைகளை உலகநாடுகளுக்கு எடுத்துச் சொல்வதற்குப் பல சந்தர்ப்பங்களைக் கூட்டணி பயன்படுத்தியது.

இப்போது நடைபெறும் சம்பவங்களை அறிந்து பிறநாட்டார் என்ன நினைப்பார்கள்.

பாராளுமன்ற ஆசனத்துக்காகத்தான போராட்டம் என்று நினைக்கமாட்டார்களா?

தமிழ்மக்களும் தலைவர்களும் நிதானமாகச் சிந்தித்து ஈழத் தமிழ்மக்களின் ஒற்றுமையையும் மானத்தையும் காப்பதற்கு உடன்வழி காணவேண்டும்.

தேர்தல் ஒற்றுமையைக் குலைப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்பதே மக்களின் பிரார்த்தனையாகும்.

# பாட்டாளி வர்க்கத்தின் ஆதர்ச புருஷர் லெனின்

— ந. ஜெயபாலன் —

[லெனினின் 107-வது நினைவு தினக்கூட்டம் இன்று யாழ்நகரில் நடைபெறுகிறது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர்கள், கம்யூனிஸ்ட் பிரமுகர்கள் உட்படப் பலர் உரையாற்றுவர்]

லெனின் என்றநாமம் உலகத்தின் மூலைமுடக்குகளில் எல்லாம் ஒலிக்கின்றது. மனித வாழ்வில் அநியாயம், அடக்குமுறை, அடிமைத்தழை, அவமதிப்பு இப்புவியில் எங்கெங்கு நிலவுகிறதோ அங்கெல்லாம் லெனின் தோற்றுகிறார். லெனின் ருஷ்யநாட்டின் சாதாரண மனிதனின் ஆட்சியை நிறுவிய ஒரு சாதாரண மனிதன்.

சோஷலிஸத்திற்கு வெளியில் மனிதவர்க்கத்திற்கு, யுத்தத்தில் இருந்தும், பசிப்பிணியில்இருந்தும் கோடானுகோடி மக்களை வாட்டி வதைக்கும் இல்லாமையில் இருந்தும் விடுதலை இல்லை என்ற லெனினது கூற்று இப்பூகோளத்தின்செவ்வலையாகச் சுடர்கிறது. சோஷலிஸத்திசை நோக்கி பயணிக்காதவன்அரசியல்வாழ்வு அஸ்தமனம் பெற்றுவிடும் நிலையை அகிலமெங்கும் அறிகின்றோம். ஆகவேதான் லெனின் என்ற இம்மா மனிதனது நினைவு மனிதவர்க்கம் உள்ளளவும் நிலைத்துநிற்கும். 'ரஷ்ய இராணியன் ஜாரை மண்ணில் புதைத்த அக்டோபர் புரட்சியும், மதர்த்துக்கிளர்ந்து எழுந்த சோஷலிஸ சோவியத்குடியரசும்தான் லெனினை மூலைமுடுக்குகளிலெல்லாம்அறிமுகப் படுத்திவைத்தன

மார்க்ஸிஸத்தின் விஞ்ஞான முறையையும், புரட்சித் தன்மையையும், சதிகாரக்கும்பல்களிடம் இருந்து காப்பாற்றியதோடு மார்க்ஸின் மூலக் கருத்துகளுக்கு முரண்பாடில்லாது தன்காலத்துச் சமூகத்தின் வளர்ச்சிக்கும், மாறுதலுக்கும்தக்கபடி மார்க்ஸிஸத்தை வளர்த்தது லெனினுடைய சாதனைச் சிறப்பு. ஏகாதிபத்தியமும், பாட்டாளி வர்க்கப்புரட்சியும் விரவிநின்ற சகாப்தத்தில் நிலவிய மார்க்ஸிஸம்தான் லெனின். 'பொது மக்களிடம் கற்றுக்கொள், பொதுமக்களுக்குக் கற்றுக்கொடு' என்பது அவருடைய நிலைபெற்ற புத்திமதி. நெருக்கடியான புரட்சிநேரங்களில் தெளிவான செயல்புரியவைப்பதில் லெனின் நிகரற்ற வழிகாட்டி.

உலகிலே முதன்முதல்தேசிய இனங்களுக்கு உரிய இடம் கொடுத்தவர் மட்டுமல்ல, தேசிய இனப்பிரச்னை, ஏகாதிபத்தியப் பருவத்திற்குத்தக்கபடி மாறுதலும் வளர்ச்சியும் அடைந்திருக்கிறது என்பதையும் பாட்டாளி மக்களின் புரட்சியாகிய பொதுப்பிரச்னையில் தேசிய இனப்பிரச்னைகளை ஒன்றுபடுத்தவேண்டியது மிக

மிக முக்கியம் என்று அவர் கருதியதுடன், இனங்களின் சுயநிர்ணயத்தைப்பற்றி மிக விரைவாக மார்க்ஸியக் கண்ணோட்டத்தில் ஆராய்ச்சிசெய்தது மட்டுமன்றி, நிறுதிட்டமான பிரதேச சுயாட்சிமூலம் பல்வேறு இனங்களின் சுயத்துவம் கெடாத வகையில் விடுதலையின் சர்வாம்சமும் பரிமளிக்கச்செய்தார்.

லெனின் இல்லாவிட்டால் இரத்தவெறிபிடித்த பொலிசையும், பட்டாளத்தையும் எதிர்த்து அன்று ரஷ்ய தெருக்களில் பகிரங்க ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்க முடியுமா? ஆயுதந்தாங்கிய படைத்தளங்கள் நிறுவி தொழிலாளிகளும் பொதுமக்களும் ஜார் படையோடு நேருக்குநேர் கைகலந்திருக்க முடியுமா? மூன்று புரட்சிகளிலும் பாட்டாளி வர்க்கம் முழுப்பங்கெடுத்திருக்க முடியுமா? இளம் சோவியத் யூனியன்மீது பதின்னான்கு முதலாளித்துவ தேசங்கள் தலையிட்டு யுத்தம் தொடுத்து, ஓநாய்கள்போல் பாய்ந்து இழைத்த கொடுமைகளை முறியடித்திருக்கமுடியுமா? இன்னும் இதுமாதிரியான எத்தனையோ வெற்றிகளையும்சாதனைகளையும் பெற்றிருக்கமுடியுமா?

லெனினுடைய வாழ்க்கைச் சிறப்பைப் பற்றி ரத்தினச் சுருக்கமாகச் சொன்னால், அவர் முதலாவது சோஷலிஸ்ட் சோவியத் குடியரசின் சிற்பி; உலக கம்யூனிஸ இயக்கத்தின் சிற்பி; புது உலகத்தின்சிற்பி.

## பிரதிஷ்டா சிரோன்மணி நாடுதிரும்பினார்

யாழ்ப்பாணம், திங்கள்

''இந்து சமய முனிவர்'' என சிங்கை-மலேசியா மக்களால் கௌரவிக்கப்பட்டுப் போற்றப்பட்ட 'கிரியா கிரம ஜோதி' 'பிரதிஷ்டா சிரோன்மணி' கிரியா மலாபமாமணி, சிவாகம ஜோதி வண்ணை வெங்கடேஸ் வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு சாமி விஸ்வநாதக் குருக்கள் தமது சைவப் பணிகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இவர் கோலாலம்பூர், பினாங், தைப்பிங், ஜோகூர் முதலிய நாடுகளில் கடந்த நான்கு மாதகாலம் இந்துகலாசார வைபவங்களில் தலைமைதாங்கியும் கோவில் கிரியைகளை நடத்தியும் உள்ளார்.

இலங்கை மக்களின் இடைவிடாத வேண்டுகோளின்படி பல கிரிகைகளிலும், துவஜாரோக தினங்களிலும், கும்பாபிஷேகங்களிலும் கலந்து கொள்வதற்காக கடந்த வாரம் விமான மூலம் கட்டுநாயக்கா வந்திருந்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் முன்னேஸ்வர தேவாலயத்தைச் சேர்ந்த இரத்தின கைலாசநாதக் குருக்கள், ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையினர் சார்பில் திருவாளர்கள் ச. சோமசுந்தரம், வ. விஸ்வநாதபிள்ளை, முத்துச்சாமி, பாலசுந்தரக்குருக்கள் முதலியோரும் மற்றும் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களைச்சார்ந்த இந்துப்பிரமுகர்களும் இவரை வரவேற்றனர்.

(கல்வி-அ)

## இன்று 'உண்மைக்குரல்' வெளியீடு

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கும் 'உண்மைக் குரல்' பத்திரிகை வெளியீட்டு விழாவும் இன்று திங்கள் மாலை சுருவில் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை எம். பீ. க்ா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. வி. தருமலிங்கம், எம்., பி. திருவாளர்கள் எஸ். கே. மகேந்திரன், பொன். சத்தியசீலன், உ. சண்முகலிங்கம், பொன். மதிமுகராசா ஆகியோர் உரையாற்றுவர். 'உண்மைக்குரல்'முதற்பிரதியை பிரபலவர்த்தகர் திரு ஈ மாணிக் வாங்குவார்.

(அ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர்த்தொகுதித் தமிழர் விடுதலைக்கூட்டணிக் கருத்தரங்கு, ஆனைக்கோட்டை வைரவர் கோவிலுக்கு அருகாமையில் இன்று மாலை திரு. எஸ். எம். கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

திருவாளர்கள வி. தருமலிங்கம், வி. யோகேஸ்வரன், எம். ஆலாலசுந்தரம், ஆர். விஸ்வநாதன், ஆ. துரைராஜசிங்கம், பொன். மதிமுகராசா, வண்ணை ஆனந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

(க-அ)

## கண்ணகை அம்மன்உற்சவம்

வேலணை, ஞாயிறு

புங்குடுதீவு கண்ணகை அம்மன்கோவிலின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெருதினங்கள் நடைபெறவிருக்கின்றது. 3-ந் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும் நடைபெறும். உற்சவ காலங்களில் சமயச்சொற்பொழிவுகளும் கதாப்பிரசங்கங்களும் இடம்பெறவிருக்கின்றன.

(உ)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

அச்சுவேலி வடக்கு மடத்தடி சித்தி வேலாயுதர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றைய கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது.

10 நாட்கள் உற்சவம் நடைபெற்று மே மாதம் 3ம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(இ)

## 'அரசாங்க அதிபர்கள் கடமை'

கொழும்பு, ஞாயிறு

எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது அரசாங்க அதிபர்கள் மேற்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்புகள் குறித்து பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன இன்று கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் விளக்கிக் கூறினார்.

(உ)

## தமிழ் மொழிபெயர்ப்பு தேவை

நுவரெலியா, ஞாயிறு

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் கல்வி இலாகாவினால் அனுப்

(7-ம் பக்கம் பார்க்க)

## இன்று மணவாளக் கோலவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை சிவன் கோயிலில் கும்பாபிஷேகதினமும், மணவாளக்கோலமும் இன்று பகல் 9.30 மணிக்கு அஷ்டோத்திர சங்கு பூசையும் பகல் 11 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 6 மணிமுதல் 7.30மணி வரை ஸ்ரீலஸ்ரீசுவாமிநாத தேசிகஞானசம்பந்தபரமாச்சாரியசுவாமிஅவர்களின்கதாப்பிரசங்கமும், இரவு 7-30 மணிக்குவசந்தமண்டபப்பூசையும் பின் சுவாமி புஷ்பப் பல்லக்கில் திருவீதிவலம் வருதலும் நிகழும்.

## வாழ்த்து

கொழும்பு, ஞாயிறு

பங்களாதேஷின்புதியஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனால் ஸியாகூர் ரஹ்மானுக்கு ஜனாதிபதி திரு. வில்லியம்கோபல்லாவ வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

(உ)

## ஜெனிவா மகாநாடு

டமாஸ்கஸ், ஏப். 24

மத்தியகிழக்குத் தொடர்பான ஜெனிவா மகாநாடொன்று மீண்டும் கூட்டப்பட வேண்டும் என சிரியாவும், சோவியத்யூனியனும் கோரிக்கை விடுத்துள்ளன.

# சுயாட்சிக் கழகம் இரண்டு தொகுதிகள் கேட்பது சரியா?

1970-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலே ''தனிநாடு'' கோரிக்கையை முன் வைத்துப் போட்டியிட்ட தமிழர் சுயாட்சிக்கழகம். தேர்தலின் பின்பும் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி தீவிர பிரசாரம் செய்து வந்ததும்; 1972-ல்தமிழரசு காங்கிரஸ் கட்சிகள் கூட்டணியாக இணைந்ததும் 1976ல் வட்டுக்கோட்டை மகாநட்டில் முறையே தங்கள் சமஷ்டி, ஒற்றையாட்சி கோரிகைகளைக் கைவிட்டு ''தனிநாடு'' இலட்சியத்தைப் பிரகடனப் படுத்தியதும் யாவரும் அறிந்ததே. அதைத் தொடர்ந்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் 'தனிநாடு' என்ற ஒரே இலட்சியத்துடன் தமிழர் சுயாட்சிக்கழகமும், கூட்டணி ஆகிய இரு இயக்கங்களும் போட்டியிடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதும் தெரிந்ததே. இந்தநிலையிலே இப்படி இரு இயக்கங்கங்களும் போட்டியிடுவதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும், தனித் தனியே செயற்படுவதனால் விரயமாகின்ற சக்தியினையும், இணைந்து செயற்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகளையும் கருத்தில் கொண்டு இரு இயக்கங்களையும் இணைய வைக்க முடியாதா? என்ற நப்பாசையுடன் இன நலனில் அக்கறை கொண்ட நல்லுள்ளங்கள் சில அண்மையிலே தீவிரமாக ஈடுபட்டன. இருபகுதியினரையும் நேருக்கு நேராக ஒரே இடத்திலே சந்திக்க வைத்து, மனம் திறந்து கருத்துக்களைப் பரிமாறி இணக்கம் காணச் செய்யும் முயற்சி 18-4-77ல் யாழ்ப்பாணத்திலே கைகூடியது. இதற்கு முன் இவ்விரு இயக்கங்களையும் இணைக்கும் முயற்சி பலதடவைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் இரு இயக்கங்களினதும் கௌரவம் பாதிக்கப்படாத வகையிலும், நேரடியாக மனம்திறந்து பேசக்கூடியவகையிலும் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியது இதுவே முதல்தடவையாகும். அந்தவகையிலே ஞானமூர்த்தி ஐயா கூடச் செய்யாத ஒரு முயற்சியைச் செய்து முடித்த அந்த உள்ளங்களைப் பாராட்டலாம். ஆனல் இச்சந்திப்பின் முடிவு இனத்துக்கு சாதகமாக அமையுமா? அல்லது இரு அணிகளும் அடிபட்டுச் சிந்துகின்ற இரத்தத்தை தருணம் பார்த்துக்காத்திருக்கும் சில குள்ளநரிகள் குடித்துக் கொழுத்துவிடப் போகின்றனவா? என்பது இன்னும் சில தினங்களில், தெரிந்துவிடும்.

## இணைவதற்குள்ள ஒரேயொரு பிரச்னை

பேச்சுவார்த்தையின் போது கொள்கையடிப்படையில் இரு அணிகளுக்குள்ளும் எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லை. என்பது இருபகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆக இணைவதற்குஉள்ள ஒரே ஒரு பிரச்னை 'தொகுதி ஒதுக்கீடு'' தான் எனத் தெரிய வருகிறது. தமிழினவிரோத சக்திகள் பாராளுமன்றத்துக்குப்போவதனைத் தடுப்பதற்காக தேர்தலில் பங்கு கொண்டு பாராளுமன்றம் போவது என்பதனை ஏற்றுக்கொண்டுள்ள நிலையிலே, தங்களுக்குள் எத்தனை எத்தனை தொகுதிகளை எப்படி எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதிலே அரசியல் கட்சிகள் அக்கறை காட்டுவதிலே தவறு இல்லைதான். அந்த அடிப்படையிலேதான் சுயாட்சிக்கழகமும் வடக்கில் ஒன்று, கிழக்கில் ஒன்று என இருதொகுகளைத் தமக்குத் தருமாறு கேட்டிருபதாகத் தெரிகிறது. வடக்கில் ஊர்காவற்றுறையில் நவரத்தினமும், கிழக்கில் திருகோணமலையில் கோடீஸ்வரனும் போட்டியிடுவதனையே சுயாட்சிக்கழகம் விரும்புவதாக ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. ஆனல் இன்றைய சூழ்நிலையிலே இந்த இரண்டு தொகுதிகளையும் விட்டுக்கொடுப்பதில் கூட்டணிக்கு உள்ள சிரமங்களையும் மறுப்பதற்கில்லை. கூட்டணியில் சுயாட்சிக்கழகம் இணையாத பட்சத்தில் ஊர்காவற்றுறையில் பண்டிதர் கா. பொ. இரத்தினமே அபேட்சகராகக் கூட்டணி சார்பில் நிறுத்தப் படுவார் என்பது நிச்சயமானதே. அந்த வகையிலே சுயாட்சிக் கழகத்துக்கு ஊர்காவற்றுறையைக் கொடுத்துவிட்டு பண்டிதரை இழப்பதற்கு கூட்டணியினர் தயங்கக் கூடும். வி. என். நவரத்தினம் போட்டியிட விருப்பம் தெரிவிக்காத நிலையிலே, பண்டிதரை கிளிநொச்சிக்கும், ஆனந்தசங்கரியை சாவகச்சேரிக்கும் மாற்றிப் பிரச்னையைத் தீர்க்கலாமெனச்சிலர் ஆலோசனை கூறிடினும் இது எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பதும் பண்டிதர் இதற்கு சம்மதிப்பாரா? என்பதும் கேள்விக் குறியே ''பாராளுமன்றத்திலே அடிக்கடி குமாரசூரியருடன் மோதுகின்ற பண்டிதர், அரசியல் சட்டத்தை முன்வைத்து உம்முடன் எந்தத்தொகுதியிலும் போட்டியிட நான் தயார் என குமாரசூரியருக்கு சவால் விட்ட பண்டிதர் நிச்சயமாக கூட்டணி அனுமதித்தால் குமாரசூரியருடன் போட்டியிடுவார்'' எனச்சிலர் கூறும் கருத்திலே எனக்கு நம்பிக்கையில்லை. பிறந்த மண்மீது பாசம் மிக்க பண்டிதர் ஊர்காவற்றுறையை விட்டு வேறு தொகுதிக்கு போவதற்கு இனி ஒருபோதும் சம்மதிக்கமாட்டார் எனபதே எனது கருத்து.

## திருமலையில் உள்ள நிலை

இனி திருமலையைப் பார்த்தால் அங்கும்பலர் அபேட்சகராகநிற்பதற்கு விண்ணப்பித்திருப்பினும் முன்னணியில் உள்ள பெயர்கள் மூன்று. திரு தங்கத்துரை, திரு.நேமிநாதன் சட்டத்தரணி சம்பந்தர் மூவருக்குமே திருமலையில் கணிசமான செல்வாக்குண்டு இதில் இருவர் தற்போது பா. உ.களாக இருப்பவர்கள். இந்த மும்முனைச் சிக்கலுக்கு மத்தியில் கோடீஸ்வரனையும் இழுத்து மூன்றை நான்காக 'நீட்ட' கூட்டணியினர்விரும்ப மாட்டார்கள். இதுதான் தற்போதைய தொகுதிநிலை.

இதை வைத்துக்கொண்டு ஆராயும்போது சுயாட்சிக்கழகத்தின் கோரிக்கை ஒன்றில் முற்றாக நிராகரிக்கப்படும் அல்லது ஒரு தொகுதிஎன்றநிலைக்கு இறங்கிவரும் என எதிர்பார்க்கலாம். இரண்டுக்குக் குறைந்த எந்தச் சமரசத்தையும் சுயாட்சிக்கழகத்தினர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனபதனை நிச்சயமாக நம்பலாம். இந்த இடத்திலே ஆக இரண்டேயிரண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்காகத்தான் சுயாட்சிக் கழகம் கூட்டணியில் இணைய மறுக்கிறதா?' என்ற கேள்வியையும் சற்று அலசவேண்டியுள்ளது. இன்று தமிழரசு, காங்கிரஸ் என்று இருக்கின்ற அமைப்புகள் எல்லாம், கூட்டணிஅரசியல் கட்சியாகஅங்கிகரிக்கப்பட்டபின்பு கலைக்கப்பட்டுவிடும் என்பதும் தேர்தலின் பின்புகூட்டணி என்ற ஒரே ஒரு அரசியல் அமைப்பு மட்டுமே இருக்கும் என்பதும், கூட்டணி - சுயாட்சிக்கழகப் பேச்சுவார்த்தையின்போது கூட்டணியினரால் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது தமிழரசும் காங்கிரசும் தமக்குள் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டநிலையிலே சுயாட்சிக் கழகம் எதுவிதமான பாராளுமன்றப்பிரதிநிதித்துவமுமின்றி கூட்டணியில் இணையும் பட்சத்தில் தமிழர் சுயாட்சிக்கழகம் என்ற அமைப்பு முற்றாக அழிக்கப்படுகிறது. அப்படி அழிக்கப்படும்போது மற்றக் கட்சிகளுக்குஇருப்பதுபோன்று தங்களுக்கும் ஒரு 'பிடி' வேண்டும் எனக் கழகம் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. அந்தப் 'பிடி'தான் இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்,

## இரண்டுதொகுதிகள் எதற்காக

இந்த இடத்திலே ஒருதொகுதியுடன் சமரசம் ஏற்பட முடியாதா? என்ற இன்னெரு கேள்வி எழுகிறது. ஒரு தொகுதி என்றல் நிச்சயமாக அது அந்த அமைப்பின் தலைவர் என்ற முறையிலே திரு. நவரத்தினத்துக்கு ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கலாம். அப்படியான ஒரு சமரசத்தின்

**திருவாதவூரன்**

அடிப்படையில் இணக்கம் கண்டு செயற்பட்டாலும் கூட்டணி ஒரு ஜனநாயக அமைப்பு என்பதனை ஏற்றுக்கொள்ளும் போது அங்கு மாறுபட்ட கருத்துக்கள் (குறிப்பிட்ட சில பிரச்னைகளில்) எழக்கூடும். அப்படி ஒரு மாறுபட்ட கருத்தை திரு. வ. நவரத்தினம் தனியாக வலியுறுத்தநேரும்போது (பாராளுமன்றக் குழுவிலே) 'இவர் எப்பவுமே இப்படித்தான்-இடையிலே குழப்புவதுதான் அவரது சுபாவம்'என்று கூறித் தமது கருத்து சுமத்தப்படலாம் என நவரத்தினம் அபிப்பிராயப்படலாம். இனி பாராளுமன்றத்திலே ஒருபிரேரணையைப் பிரேரிக்கும்போது அதனை ஆமோதிப்பதற்குத் தனக்கு நம்பிக்கையான, எந்தவொரு இக்கட்டான கட்டத்திலும் தன்னைக் கைவிடாத நல்லதொரு துணை

## விவாத மேடை

பாராளுமன்றத்திலே இருப்பதனை அவர் விரும்பக்கூடும். 1968ம் ஆண்டு திரு.சுரேந்திரநாதன்,பத்மநாதன் என்றஇரு தமிழர்களைச் சிங்களம் படிக்க மறுத்த காரணத்தினல் பதவி நீக்கம்செய்யக் காரணமாக இருந்த அரசாங்கசேவை ஆணைக்குழு மீது ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தான் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்தபோது, அப்பிரேரணையை ஆமோதிக்க யாருமே அற்று தன்னந்தனியாகநின்ற பரிதாபகரமானநிலை தனக்கு மீண்டும் வரக்கூடாது என அவர் கருதக்கூடும். 'தான் பா. உ. வாக வருவதற்காக சுயாட்சிக்கழகத்தை நலயகூட்டணியில் கரைத்துவிட்டார்' என்ற பழிச்சொல் தனக்கு வரக்கூடாது எனவும் அவர் பயப்பட்டிருக்கலாம். இத்தகைய சிந்தனைகளின் அடிப்படையிலும் திரு. கோடீஸ்வரன் போன்றதுணிச்சலும், தியாக மனப்பான்மையும் கொண்ட ஒருவருக்கு 'ரிக்கற்' கொடுப்பது கூட்டணியினருக்கு அவ்வளவுசிரமமான ஒன்றல்ல என்று கருதியகாலுமேதான் அவர்கள் இரண்டு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கோரியிருக்கலாம் எனக் கருதஇடமுண்டு.

ஒரு கருத்தைமட்டும் திட்டவட்டமாக என்னல் வலியுறுத்திக் கூறமுடியும். சுயாட்சிக்கழகம் கேட்டபடியே இரு தொகுதிகளை நவரத்தினத்துக்கும், கோடீசுவரனுக்கும்கொடுக்கும் பட்சத்தில், இனவிடுதலைப் போராட்டத்திலே தீவிரபங்கு வகிக்கக்கூடிய, துணிச்சலும் திறமையும், நேர்மையும், தியாக மனப்பான்மையும், இலட்சியவெறியும் கொண்ட இரு. பா. உ.க்கள் கூட்டணிக்குக் கிடைப்பார்கள். இதற்காக ஏனையவர்கள் மேற்குறித்த இலக்கணங்களுக்கமையாதவர்கள் என்று அர்த்தமல்ல. மற்றவர்கள் எப்படியாயினும் இந்த இருவரும் தீவிரவாதிகள் என்பதும் மற்றவர்களைவிட எந்தவகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்பதும் இங்கு அழுத்தம் திருத்தமாகக் கூறப்படவேண்டிய உண்மை.

## கொள்கைப்பற்று உள்ளவர்கள்

இவர்கள் இருவரது தூய்மையையோ, கொள்கைப்பற்றையோ, யாருமே சந்தேகிக்க முடியாது. இவர்களது கடந்த கால வாழ்க்கையை அலசிப் பார்த்தால், இருவருமேஇனத் துக்காகத் தியாகத்தீயிலே குளித்தவர்கள்-பல கஷ்ட நஷ்டங்களையெல்லாம் தாங்கியவர்கள்-இனவிடுதலை இயக்கத்திலே தீவிரமாகப்பங்குகொண்டவர்கள் - கொள்கைப்பற்று மிக்கவர்கள்-ஆரம்பகாலத்தமிழரசுவாதிகள்-அனைத்திலும் மேலாகப் பதவிவெறியற்றவர்கள்-கொண்ட கொள்கையைவிட பா. உ. பதவிதான் பெரிதென எண்ணியிருந்தால், இன்றும் தமிழரசுக் கட்சியிலேயே இருந்திருந்தால் திரு. வ. நவரத்தினம் இன்றும் பா.உ.வாக இருந்திருக்கலாம். ஏற்பட்ட கொள்கைவேற்றுமை காரணமாக தமிழரசைவிட்டு வெளியேறி சுயாட்சிக் கழகத்திலே சேராதிருந்திருந்தால் திரு செ. கோடீசுவரன் இன்றுதிருமலைத் தமிழரசுப் பா. உ. வாக இருந்திருப்பார். (இது எனது கருத்தல்ல. இன்றும் தமிழரசுக்கட்சியில் அங்கம் வகிக்கும் நீண்டகாலத்தமிழரசுவாதிகள்சிலரது கருத்து) ஆனல் இருவருமே தாம் சரியென நம்பிய கொள்கைக்காக-அதில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக தாங்களும் சேர்ந்து கட்டி வளர்த்த கட்சியையே உதறித் தள்ளிவிட்டுப் புறப்பட்டவர்கள்.

திரு. வ நவரத்தினம் அவர்கள் வன்னியர், தந்தை செல்வா போன்றவர்களோடு இணைந்து தமிழரசுக்கட்சியை நிறுவிக் கட்டி எழுப்பியவர். தமிழரசுக் கட்சியின் முதலாவது பொதுச் செயலாளர் பதவியை வகித்தவர். தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம், ஸ்ரீஎதிர்ப்புப் போராட்டம் போன்ற முக்கியமானஎழுச்சிப் போராட்டக்காலகட்டங்களில் எல்லாம் பொதுச்செயலாளர் பதவியைப் பொறுப்போடு வகித்து வெற்றிகரமாக அவற்றையெல்லாம் நடத்தி முடித்த செயல்வீரர். சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது சத்தியாக்கிரகிகள் விடயத்திலே அரசு அக்கறை காட்டாதிருந்தது-மழைகாலம்வேறு - மழை பெய்தால் சத்தியாக்கிரகம் தோல்வியடைந்துவிடும். எனவே அரசினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையிலே செயற்படவேண்டுமெனச் சிந்தித்து தமிழரசு முத்திரை வெளியிடும் திட்டத்தை அறிவித்து அதைச் செயலிலே காட்டி அதன்மூலம்அரசினரை நடவடிக்கை எடுக்கச்செய்து சத்தியாக்கிரகம் வெற்றிபெறக் காரணமாக இருந்த திறமைசாலி. ''திருமலையாத்திரை''யை ஒழுங்குசெய்து நடத்திக்காட்டிய தீரர், திருமலையாத்திரையைதொடர்ந்து நடைபெற்ற திருமலை மாநாடு பற்றி அன்றைய சுதந்திரன் இதழ்களிலே எழுதிய மட்டு நகர் பா. உ. பின்வருமாறு குறிப்பிட்டார்: ''....மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாநாட்டுப் பந்தலிலே—மேடையிலே பலர் அமர்ந்திருந்தனர். மாநாடு விடயங்களிலே எதுவிதமான பங்கினையும்வகிக்காதவர்கள் கூட செல்வாக்குப் பெறும் நோக்குடன் முன்வரிசையிலே காணப்பட்டனர். ஆனல் இத்தனை கருமங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்த ஒரேயொரு உருவத்தை மட்டும் மாநாட்டு மேடையிலே காணமுடியவில்லை. எல்லா இடமும் தேடினேன். எங்கோ ஒரு மூலையிலே அந்த உருவம் இருந்துகொண்டு ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்தது. ஆமாம் அடுத்து என்னசெய்யுவோம் என அது அமைதியாகத் திட்டம் திட்டிக் கொண்டிருந்தது. அது வேறுயாருமல்ல. திரு. வ. நவரத்தினம்அவர்கள் தான்'' இப்படி நவத்தைப் பற்றி எழுதினர் இராசதுரை. அந்தளவுக்கு சுயவிளம்பரம் இல்லாமல் செயல் புரிந்தவர் நவரத்தினம். இவ்வாறுசெயல்பட்டதன் மூலம் ''தமிழரசு மூளை'' எனப் பாராட்டப்பட்டவர், இலங்கை-இந்தியஒப்பந்தம், அடையாள அட்டை போன்ற விடயங்களிலே ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக அவை தமிழருக்குப் பாதகமானவைஎன்றுசொல்லி ''எனது மனச்சாட்சிக்குமாறாக அவற்றை என்னல் ஆதரிக்க முடியாதுஎதிர்த்தேதீருவேன்'' என்று கூறி தமிழரசுக்கட்சியின் முடிவக்குமாறாகச் செயற்பட்ட காரணத்தால் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவர்.

அடுத்துதிரு. செ. கோடீசுவரன் அவர்கள் எழுதுவினைஞராகத் தொழிலை ஆரம்பித்து தமிழரசுக் கட்சியின் முடிவுக்கமைய சிங்களம் படிக்க மறுத்து, அதன்காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக ஒரு வழக்கையே நடாத்திமுடித்தவர். இனவிடுதலைக்கு மொழிவழித் தொழிற் சங்கங்களை நிறுவவேண்டும் - மொழிவழிப் போராட்டங்களின் மூலமே தமிழ் எழுதுவினைஞர்களின் உரிமைகளைப் பாதுகாக்கமுடியுமென்று சிந்தித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கும் முயற்சியிலே அ. எ. வி. சங்கத்தின் ஸ்தாபனத் தலைவரான திரு. க. சிவானந்தசுந்தரம், அமரர் இராசரத்தினம் போன்றவர்களோடு தோளோடு தோள் நின்று பாடுபட்டவர். அதன் பொருளாளராகவும், 'எழுச்சி' இதழின் ஆசிரியராகவும், தலைவராகவும் பலகாலம்பணி புரிந்து இயக்கத்தைக் கட்டி வளர்த்தவர் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தைத் தொடர்ந்து 560ம் இலக்க இறைச்சேரி சுற்றறிக்கையின் பிரகாரம் சிங்கத்தின் தேர்ச்சிபெறுத தமிழ் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மறுக்கப்பட்டபோது. அதற்கு எதிராகத் தமிழ் ஊழியர்களது சார்பிலே யாராவது ஒருவரது பெயரிலே வழக்காடத்திர் மானித்தபோது பலர் முன்வரத் தயங்கியும் அஞ்சியும் ஒதுங்கியபோது துணிந்து தனது பெயரிலே வழக்காட முன்வந்த ஏழை எழுது வினைஞன் பொருளாதாரரீதியாக பெரும் வசதியற்ற நிலையிலும்கூட பல நல்லிதயங்களின் உதவிவழக்கை நடத்தி முடித்த தியாகச் செம்மல். இலங்கையின் வரலாற்றிலேயே முதன் முதல் அரசாங்கத்தை- அதனது சட்டத்தை எதிர்த்து தொழிற் சங்கரீதியாக வழக்காடிய ஒரே ஒரு அரசாங்க ஊழியன் இலங்கை அரசின் கொடுமையை உலகமே அறியும் வண்ணம்பிரிவுக்கவுன்சில்வரை கொண்டுபோய் வழக்காடிச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்த பெருமகன். ''கோடீஸ்வரன் வழக்கு'', ''கோடீசுவரன் வழக்கு'' என்று கூறி-இலங்கையின் சகல பாகங்களிலும்உள்ள தமிழ் அரசு ஊழியர்கள் எல்லாம் தெம்பும் துணிவும் பெறவைத்ததீரன்.

## கோடீஸ்வரன் வழக்கு அரசியலமைப்பை மாற்றியது

1970 பொதுத் தேர்தலைத் தொடர்ந்து சுதந்திரக்கட்சி

[7-ம் பக்கம் பார்க்க]

# மகாவலி அபிவிருத்திக்கு ஒல்லாந்து உதவும்

கொழும்பு, ஞாயிறு

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவுவதற்கு ஒல்லாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த வகையில் ஒல்லாந்து தூதுக்குழு ஒன்று கடந்த வெள்ளியன்று மேற்படி அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டது.

நால்வர் கொண்ட இக்குழுவுக்கு திரு. லெசினர் தலைமை தாங்குகிறார்.

ஒல்லாந்து அரசாங்கம் இவ் அபிவிருத்தித் திட்டத்திற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கும். (உ)

## அரசு ரூ 10லட்சம் செலவிடும்

கொழும்பு, ஞாயிறு

போஷாக்கின்மையை போக்கடிக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் 10லட்சம் ரூபாவைச் செலவிடவுள்ளது.

இதில் 5லட்சம் ரூபாவை ஐ. நா. சிறுவர் நிதி நிறுவனம் அளிக்கிறது.

போஷாக்கின்மையை அகற்றுவதுடன் மக்களுக்குப் போஷாக்கின்மையால் விளையும் துன்பங்கள் பற்றி விளக்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (உ)

## புதிய நிர்வாகிகள்

ஊரெழு, ஞாயிறு

நாவற்குழி சனசமூக நிலையத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சு. நடராசா உப தலைவர்: திரு. கு. சுப்பிரமணியம், செயலாளர்: திரு. மு. ஸ்ரீகாந்தன், உபசெயலாளர்: திரு. சி. சாந்தமூர்த்தி, பொருளாளர்: திரு. செ. சதானந்தமூர்த்தி, உப-பொருளாளர்: திரு. சி. சிறீகரன்.

மற்றும் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ)

## புரனமைப்பு கூட்டம்

வேலணை, ஞாயிறு

இம்மாதம் 27ம் திகதி வேலணைஉதவிஅரசாங்கப் பிரிவிலுள்ள இலங்கை தேசியகயரோக நிவாரண சங்கத்தின் வேலணைக் கிளையின் புனரமைப்புக் கூட்டம் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இப் புனரமைப்புக் கூட்டத்தில கல்வி அதிகாரி திரு. நடராசனும் உரையாற்றவிருக்கின்றார். (உ)

## அன்பளிப்பு

ஊரெழு, திங்கள்

நாவற்குளி சனசமூக நிலையத்திற்கு மில்க்வைற்சவர்க்காரத் தொழிலகத்தின் அதிபர் திரு. க. கனகராசா கண்ணாடி அலுமாரியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அண்மையில் நடைபெற்ற மேற்படி சனசமூகநிலையத்தின் மின் இணைப்பு வைபவத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. கனகராஜா நாவற்குளி சனசமூகநிலையத்தின் சிறப்பானசேவைகளைப் பாராட்டிப் பேசினார். (இ)

# "முழுநேர உழைப்பாளிகள் 6 எம். பீ.க்களே போதும்"

— திருமதி மங்கையர்க்கரசி

நெல்லியடி, ஞாயிறு

"இயக்கத் தொண்டில் முழுநேரமாக உழைத்து, தமிழினத்திற்காகப் போராடும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் மட்டும் இருந்தால் தமிழர் விடுதலைக்கூட்டணி தனது கோரிக்கைகளை வென்றெடுக்கமுடியும்"

இவ்வாறு எல்வெட்டியில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைக் கருத்தரங்கில் பேசிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறினார்.

எல்வெட்டி வேவில் பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. தி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு முழுநேரமாக இயங்கக்கூடிய ஆட்சிமன்ற உறுப்பினர்களே இனிமேல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களையே ஆட்சிமன்றத்திற்கு கூட்டணி அனுப்ப நடவடிக்கைஎடுக்கவேண்டும். இயங்கக்கூடியவர்களும், உற்சாகமாக உழைக்கக்கூடியவர்களுமாக ஆறு உறுப்பினர்கள் கூட்டணிசார்பில் ஆட்சிமன்றம் சென்றால் எமது கோரிக்கைகளைச் சாதிக்கமுடியும்.

"கடந்தகால உரிமைப் போராட்டங்களில் எமது தமிழ்த்தலைவர்கள் சாதித்தது போல இக்கால இளைஞர்கள் பலவற்றையும் சாதித்துள்ளனர். குறிப்பாக சிறைசென்ற இளைஞர்கள் எமது தலைவர்கள் சாதித்ததைவிட அதிகமாகச் சாதித்துள்ளனர். இளைஞர்களின் துணிவும் முயற்சியும் பாராட்டக்கூடியதாகும்"

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

"ஆட்சிமன்றம் சென்றுதான் இயக்கத்தை வலுப்படுத்தவோ, இயக்கத்துக்குச் சேவைசெய்யவோ வேண்டுமென்பதல்ல. ஆட்சிமன்றத்தினைத் தமிழினத்தின் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதியே அதற்கு நாம் செல்கின்றோம். கடந்த தேர்தலில் நான் தெரிவுசெய்யப்படாமையினால்தான் இயக்கத்தொண்டில் முழுநேரமாக என்னால் பாடுபடமுடிந்தது"

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்ட நேரத்தைத் தாண்டியமையால் பொலிசார் ஒலிபெருக்கியைத் தடைசெய்தனர். திரு. அமிர்தலிங்கம் ஒலிபெருக்கி இன்றி தொடர்ந்து பேசினார்.

பெண்கள் ஆண்கள் உட்படப் பெருந்தொகையானோர் கலந்துகொண்ட இக் கருத்தரங்கில் வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா கே. ஜெயக்கொடி எம். பி., கே. துரைரத்தினம் எம். பீ., எஸ். ஞானமூர்த்தி ஆகியோரும் பேசினர். (அ)

## புளியங்கூடலில் கத்திக்குத்து

வேலணை, ஞாயிறு

கத்திக்குத்துக்கிலக்கான நபர் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புளியங்கூடலில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கே. இரத்தினம் (45 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பழைய பகைமையே இச்சம்பவத்திற்குக் காரணமென பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளதாம். (உ)

## சாம்பியன்கள்

நல்லூர், ஞாயிறு

விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள சன சமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றிற்கிடையே நடைபெற்ற சாம்பியன் விளையாட்டுப் போட்டிகளின் சில முடிவுகள் பின்வருமாறு:

**யாழ். சிறைச்சாலை வி. க.**

யாழ்ப்பாணம் சிறைச்சாலை விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்ட சாம்பியன் மோதலில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை விளையாட்டுக் கழகம் 3—0 செட்டுகளால் சாம்பியனானது.

யாழ்ப்பாணம்சிறைச்சாலைக் கோஷ்டிக்கு பி. ஆர். டி. ரி. பி. நிமாலும், யாழ்ப்பாண பொலிஸ் கோஷ்டிக்கு சார்ஜன்ட் மேஜர் அழகக்கோனும் தலைமைதாங்கினர்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு சார்ஜன்ட் ராஜரத்தினம்மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

**சென் மேரிஸ் வி. க.**

சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெறவிருந்த சாம்பியன் மோதலில் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் சமூகமளிக்காமையால் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத்தெரிவானது.

**சென் நிக்கிலஸ் வி. க.**

சென் நிக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், ஜொலி ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட 'பி' பிரிவு சாம்பியன் மோதலில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் 4—2 கோல்களால் வெற்றிபெற்று சாம்பியனானது.

சென் நிக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கு ரி. ராஜகாரியாரும், ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு பி. பாலகிருஷ்ணனும் தலைமை தாங்கினர்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எம். ரி. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (அ)

## பத்திரிகை ஆசிரியருக்கு ரூ.25,000பிணை

கொழும்பு, ஞாயிறு

கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான 'அத்த'வின் ஆசிரியர் திரு. எச். ஜி. எஸ். ரதன்வீரா 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு நாணய மோசடிக்குற்றச்சாட்டுத் தொடர்பாக கடந்த மாதம் 24-ம் திகதி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட இவரை கொழும்பு பிரதம மாஜிஸ்ரேட் திரு. ரி. சுந்தரலிங்கம் நேற்றுபிணையில்செல்ல அனுமதித்தார். (இ)

## காங்கிரஸ் வா. மு. கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிபுனரமைப்புகூட்டம் இன்று மாலை சாவகச்சேரியில் வாலிப முன்னணி அமைப்பாளர் திரு. ஆர். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும். தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம்உரைநிகழ்த்துவார். (க)

## தொடர்ந்து றிமாண்ட்

வேலணை, ஞாயிறு

வேலணையில் கள்ளுத் தவறணைக் கொலைசம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள நாகரத்தினம், சண்முகரத்தினம், பூபாலசிங்கம், தியாகராசா அல்லது அன்ரன் என்போரை ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வை. ஜெகசோதி தொடர்ந்துறிமாண்டில்வைக்க உத்தரவிட்டுள்ளார். காங்கேசு சுப்பிரமணியம் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார். (உ)

## சிகிச்சை பற்றி ஆராய கமிஷன்

புதுடில்லி, ஏப். 24

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவசரகாலநிலைமையின் போது காவலில் இருக்கையில் அவருக்களிக்கப்பட்ட வைத்திய சிகிச்சைபற்றி ஆராய தனிநபர் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வேலூர் ஆஸ்பத்திரியில் பிரபல வைத்திய நிபுணராக இருந்த ஒருவரே இக் கமிஷன் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.




அடங்கிய செறிதிரவம்
உற்பத்தியாளர்
பேயர் ஜெர்மனி
இலங்கையில் இப்பொருள் தயாரிப்பாளர்
ஹேகெம் லிமிட்டெட்
BAYER
400. டீன்ஸ்ரேட், கொழும்பு 10.

ராஜா (யாழ். நகர்)
எஸ். எஸ். ஆர். - ரங்கராவ்
விஜயகுமாரி
[தினசரி 4 காட்சிகள்]
சாரதா

12 வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only

அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.

For All Good Children From 8 to 88!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன் ° முத்துராமன் ° சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார் - லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி (யாழ். நகர்)
சிவாஜி - ஜமுனு - வீரப்பா
நடித்த
மருதநாட்டுவீரன்
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தானபடைப்பு
நாளை நமதே

RIO (Jaffna) Daily 4 Shows
PERCY'S PROGRESS
Color — (Adults only)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
° சிவாஜி (இருவேடம்)
° ஜெயலலிதா ° சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)


# தமிழ்க் காங்கிரஸ் வாலிபர்களுக்கு கூட்டணிக் குழுவில் இடம் வேண்டும்

## த. கா. வா. மு. தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் 'தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி உறுப்பினர்களுக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக்குழுவில் இடம் கிடைப்பதற்குத் தமிழ்க் காங்கிரஸ் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற தீர்மானம் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணிக் கூட்டத்தில் நிறைவேறியது.

காங்கிரஸ் நிர்வாக செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை இல்லத்தில் வாலிப முன்னணி தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் 108 வாலிபர்கள் கலந்து கொண்டனர். மண்டபத்திற்கு வெளியிலும் வீதியிலும் ஏராளமான ஆதரவாளர் திரண்டுநின்றனர். இக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைமைப்பீடத்தைச் சேர்ந்தவர்களும் கூட்டணி நடவடிக்கைக்குழு உறுப்பினருமான திரு. தா. சங்கரப்பிள்ளை, திரு. ஆர். விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வாலிபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

காங்கிரஸ் வாலிபமுன்னணி தீர்மானத்தை ஏற்றுக் கூட்டணி நடவடிக்கைக் குழுவில் தமிழ்க்காங்கிரஸிற்கு கூடிய பிரதிநிதித்துவமும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் இடமளித்ததையிட்டு கூட்டணிக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேறியது.

காங்கிரஸ் வாலிபமுன்னணியின் தீர்மானத்தை ஏற்று ஜி. ஜி. யின் அஞ்சலிக் கூட்டத்தை எழுச்சிக்கூட்டங்களாகவும், வரவேற்புக்கூட்டங்களாகவும் நடத்துவதை நிறுத்தியதையிட்டு நன்றிதெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமுடிவில் மேற்கண்ட அறிக்கையை, வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்டார். [க]

## சுயாட்சி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் தேர்தலுக்காக அளித் எத்தனையோ வாக்குறுதிகளையெல்லாம் விட்டுவிட்டு முதன் முதலாக இலங்கையை குடியரசுப் பிரகடனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது என்றல் அதற்கு முழுக்காரணமுமே கோடீஸ்வரன் வழக்குத்தான். அந்த வழக்கு மீண்டும் பிரிவுக்கவுன்சிலுக்குப் போனல் என்ன நடக்கும்? என்ற பயம் ஆட்சியாளர்களுக்கு இருந்தது. அதற்குமுன் குடியரசாகப்பிரகடனம் செய்துவிட்டால் தப்பிவிடலாம் எனக்கருதினர்கள். அதனுல்தான் குடிரசுப்பிரகடனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பிப்பார்கள். அப்படியிருந்தும் குடியரசுப்பிரகடனத்துக்கு முன்னதாகவே பிரிவுக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை மறுக்கும் மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றினர்கள். அந்தளவுக்கு ஆட்சியாளர்களுக்கு சிம்மசொர்ப்பனமாக இந்த அந்தக் கோடீசுரவனை- அவர் செய்த தியாகத்துக்கு வெகுமதியாக என்று அல்ல-அவரது துணிச்சலுக்கும் கொள்கைப் பற்றுக்குமாகவாவது ஒரு பா. உ. வாக்கி சிங்களவர் நிறைந்த அந்தப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துப் பார்க்கக் கூடாதா? எனநான் இரந்து நிற்கவில்லை. ஏன் அனுப்பக்கூடாது? என்று தான் தமிழினத்தைப் பார்த்துக் கேட்கஆசைப்படுகிறேன்.

### வழிநடத்தும் தகுதி கழகத்துக்கு உண்டு

இந்தவகையிலே இரண்டு தொகுதிகள் கேட்க சுயாட்சிக் கழகத்துக்கு தகுதி உண்டோ என்னவோ ஆனல் சுயாட்சிக்கழகம் குறிப்பிடும் வேட்பாளர்களுக்கு நிச்சயமாக தமிழினத்தை வழிநடத்தும் தகுதியுண்டு என்பதனை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன் இதற்காக கூட்டணி கட்டாயம் இரண்டு தொகுதிகளைக் கொடுக்கத் தான் வேண்டுமென்று வாதாட நான்வரவில்லை- அதற்கு எனக்கு உரிமையுமில்லை. ஆனல் அப்படிக் கொடுக்கக் கூடியசூழ்நிலை உருவாகுமானல் அதன் விளைவு நிச்சயம் இனத்துக்கு நல்லதாகவே இருக்கும் என்பதனைத்தான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இறுதியாக திருவாதவூரனது கருத்துக்களைச் சுயாட்சிக் கழகத்தின் கருத்துக்களாகக் கருதும் காரைநகர் - அம்பலம் போன்ற அன்பர்களுக்கு சில வார்த்தைகள்: திருவாதவூரன் சுயாட்சிக் கழகத்தின கருத்தை வெளியிடும் அங்கீராரம் பெற்ற பிரதிநிதி அல்ல. இக்கட்டுரையிலுள்ள கருத்துக்கள் அனைத்தும் திருவாதவூரனது சொந்தக்கருத்துக்களே. அவை சிலவேளை நீங்கள் கருதுவது போல சுயாட்சிக்கழகத்துக்கு ஆதரவானவையாக இருக்கலாம். அதற்கு நான் என்ன செய்வது விசுவாசமான தமிழனது கருத்துக்கள் நியாயத்தின் பக்கம் சார்ந்து நின்றல் அதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

# 'மனநோய் வைத்தியர்களின் சேவை மகத்தானது'

நெல்லியடி, ஞாயிறு "சமுதாயத்தின்பரிகசிப்பிற்கும் பரிதாபத்திற்குமுள்ளான மனநோயாளர்களை சமுதாயத்தின் ஓர் அங்கமாக மனநோய் வைத்தியநிபுணர்கள் மாற்றி விடுகிருர்கள்" என்றுமந்திகை அரசினர் வைத்தியசாலையில் மனநோய் வைத்தியநிபுணராகக் கடமையாற்றி மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்லும் டாக்டர் ஆர். இராஜேந்திர பிரசாத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் தலைமைவகித்துப்பேசிய யாழ். மனநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜி. எஸ். ஞானசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; டாக்டர் இராஜேந்திர பிரசாத் தனது அறிவுத்திறனுல் பலமனநோயாளர்களுக்கு வாழ்வுஅளித்ததுடன் தன்னலமற்ற சேவையைத் தனது கடமை நேரத்தைவிட சிறிய முறையில் செய்து வந்துள்ளதை பாராட்டினர்.

மேற்படி வைத்தியசாலை உடல்நலம் பேணும் உத்தியோகத்தர் திரு. ஆ. பேரின்பநாயகம் மற்றும் திருவாளர்கள் த. பரஞ்சோதி, செ. வேலாயுதம், மா. ஆறுமுகம், திருமதி எஸ். செல்வராசா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (அ)

## தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பப்படும் கடிதங்களுக்குத்தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்படவேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நுவரெலியா மாவட்டச் செயலாளர் திரு. த. மகாசிவம் இப்பகுதி கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஜே. என். செனிவரத்னவை கோரியுள்ளார்.

மே மாதத்தில் இருந்து இந்த மொழிபெயர்ப்புப் பிரதி இணைக்கப்படும் என்ற நம்பிக்கை உண்டென்று கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து இக்கோரிக்கையை வலியுறுத்திய திரு. மகாசிவம் நம்பிக்கை தெரிவித்தார். (உ)


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
முத்துராமன் - ஜெயா
சுடரும்சூறுவளியும்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு 2-30 6-30 9-30
ஜெமினி — சாவித்திரி
கொஞ்சும் சலங்கை

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
T. M. சௌந்தரராஜன்
அருணகிரி நாதர்



யாழ். வின்ஸர் வெண்திரையில்
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∴ சௌகார்ஜானகி, ∴ சுகுமாரி ∴ M. பானுமதி M. R. R. வாசு
° வி. கே. ராமசாமி ° சசிகுமார் ° மாஸ்டர் ரகுராமன் நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்)
திரைக்கதை வசனம்: பாலமுருகன்
டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

ஈழநாடு
The EELANADU

# "சக்காரியா கமிஷன் முடிவை ஏற்க வேண்டாம்"

## மத்திய அரசிடம் தி. மு. க. கோரிக்கை

### சென்னையில் எம். ஜி. ஆர். கட்சியும் கூடி ஆலோசனை

சென்னை, ஏப். 24

தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி உட்பட முன்னாள் அமைச்சர்கள் சிலர்மீது சர்க்காரியா கமிஷன் எடுத்துள்ள முடிவுகளை ஏற்கவேண்டாமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று நேற்று தஞ்சாவூரில் கூடிய தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

**சிட்டி பாபு குடும்பத்துக்கு உதவி**

சென்னை மத்திய சிறையில் 'மிசா' கைதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் தி. மு. க. முக்கியஸ்தர்களில் ஒருவரான சிட்டிபாபு எம். பி. சிறையில் மரணமான சூழ்நிலை குறித்தும் விசாரணை நடாத்தப்படவேண்டும் என்ற தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா 25,000 ரூபா உதவி வழங்குவதெனவும் பொதுக்குழு தீர்மானித்தது.

**கலைஞருக்கு அதிகாரம்**

தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியனின் விலகலையடுத்து கழகத்தின் முக்கிய நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரத்தை தலைவர் கலைஞர் கருணாநிதிக்கு வழங்குதென பொதுக்குழு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை கலைஞர் கருணாநிதி இன்றுசென்னையில் வெளியிட்டார்.

இதற்கான கழக அமைப்பு விதித்திருத்தம் செய்யப்பட்டது என்றார் அவர்.

நடந்து முடிந்த லோக்சபா தேர்தல் குறித்தும் எதிர்வரும் சட்டசபைத்தேர்தல்குறித்தும் பொதுக்குழு பரிசிலனைசெய்தது என்றும் கலைஞர் தெரிவித்தார்.

**எம். ஜி. ஆர். கட்சிக்கூட்டம்**

இதேவேளை அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகத்தின் செயற்குழு இன்று சென்னையில் கூடியது.

இக்கூட்டத்தில் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் கலந்துகொண்டார்.

பார்லிமென்ட் உறுப்பினர்கள் உட்பட 149 அழைப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலின்போது எக்கட்சியுடனாவது கூட்டுச்சேர்வதா என்பது பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

காலஞ்சென்ற ஜனாதிபதி அலி அகமத், ஈ. வெ. கி. சம்பத், ஏ. கே. கோபாலன், தோமஸ் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஸ்தாபன காங்கிரஸாரும் கூடினர்**

ஸ்தாபன காங்கிரஸின் செயற்குழுக்கூட்டமும் சென்னையில் நடைபெற்றது. சட்டசபை தேர்தலில் எக்கட்சியுடனாவது இணைப்பை ஏற்படுத்திக்கொள்வதா என்பது பற்றி கூட்டத்தில் பரிசிலனை செய்யப்பட்டது.

மேலிடத்தின் ஆலோசனையுடன் இதுபற்றி தக்க தருணத்தில் அறிவிக்கப்படுமென கட்சியின் தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. பி. ராமச்சந்திரன் இன்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் ஒரேநாளில் நடைபெற்று முடியும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தேர்தல் கமிஷனர் திரு. வி கே. ஒஸா தெரிவித்தார்.

இரவு 10 மணிக்குள் முடிவுகள் வெளியாகிவிடும் என்று சொன்னார் அவர்.

வாக்குப் பதிவுபற்றி எதுவித மேலிடத் தகவலும் இதுவரை கிடைக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார். (உ)

---

## மேதின அமைப்புக் குழு நாளை கூடுகிறது

யாழ்ப்பாணம், திங்.

கூட்டணி மேதின அமைப்புக்குழுக்கூட்டம் நாளை மாலை கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

தமிழ்தொழிற்சங்க கூட்டணித்தலைவர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், மேதின ஒழுங்குகள்பற்றி சமரச முடிவு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்சங்க கூட்டணிச் செயலாளர் திரு. சம்பந்தன் இக்கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

இதேசமயம், தமிழ்தொழிற்சங்க மன்னார் மாவட்டஅமைப்பாளர் திரு. வெ. செல்வநாயகம் தொழிற்சங்க கூட்டணி இணைச்செயலாளர் திரு. வே. அருணகிரியும் ராஜினமாச் செய்துள்ளனர். மற்றும் பலர் ராஜினமாச் செய்யவிருக்கின்றனர். (க)

---

## காரைநகரில் கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினம்!

யாழ்ப்பாணம், திங்கள்

கூட்டணியுடன் சேர்ந்து மேதினவிழாவை நடத்தமுடியாத நிலைமை ஏற்படும் பட்சத்தில், காரைநகரில் மேதின விழாவை நடத்த கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவிலுள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

காரைநகரில் நடக்கும் மேதினவிழாவில் கூட்டுமுன்னணி பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள் என்று தெரியவருகிறது. இதுபற்றிய இறுதி முடிவு இம்மாதம் 28-ம்திகதி எடுக்கப்படும.

**கூட்டணி ஏற்பாடுகள்**

தமிழ்த் தொழிற்சங்க கூட்டணி பொதுச்செயலாளர். திரு. ஐ. த. சம்பந்தர், நேற்று யாழ்ப்பாணம் வந்து கூட்டணி மேதின அமைப்புக்குழுவினருடன் கலந்து பேச்சுவார்த்தை நடத்தினாராம்.

இப்பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மேதின ஏற்பாடுகளை அவர்கள் துரிதமாக செய்துவருகின்றனர் என திரு. சம்பந்தர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், 'ஊர்வல ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேசமயம் திரு. செல்லத்தம்புவுக்கும் அமைப்புக் குழுவினருக்குமிடையில் இணக்கம் ஏற்படுத்துவதிலும் திரு சம்பந்தர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(Note: the மேதின அமைப்புக்குழுவிலிருந்து ராஜினமா செய்தவர் line follows:) திரு. ஐ. த. சம்பந்தர் ... மேதின அமைப்புக்குழுவிலிருந்து ராஜினமா செய்தவர்

---

## குருெமிகோ இன்று இந்தியா விஜயம்

புதுடில்லி, ஏப். 25

சோவியத்யூனியன் வெளிநாட்டமைச்சர் திரு. குருெமிகோ மூன்றுநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இன்று புதுடில்லி வருகிறார்.

பாரத-சோவியத்யூனியன் நட்புறவு குறித்து இவர் பாரத தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். (உ)

---

## வல்வெட்டிக் கொலை: ஒருவர் சந்தேகத்தில் கைது

நெல்லியடி, ஞாயிறு

வல்வெட்டி வீதியில் எஸ். ஐயாத்துரை என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக வாலிபர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எஸ், கணேசு என்ற சந்தேக நபரை வல்வெட்டித்துறைப் பொலிசார் பருத்தித்துறை நீதவான் அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது இம்மாதம் 29-ந் திகதிவரை இச்சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதவான் மேல்விசாரணையை இம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

---

## இன்று லெனின் நினைவுவிழா

யாழ்ப்பாணம், திங்

லெனினின் 107-வது நினைவு நாள் விழா இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க ஆதரவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், எம். வி. சுப்பிரமணியம், வி. ஆனந்தசங்கரி முதலானோர் பேசுவர். (உ)

---

## ஆசிரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த தகுதியுடையவர்களுக்கு நியமனத்திற்காக, நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தால், உடனடியாக இது பற்றி உங்கள் தொகுதி எம். பிக்கும் கல்வி அமைச்சருக்கும் அறிவித்தால், உடனடியாக அந்தக்குறை தீர்க்கப்படும் என, கூட்டணி எம். பி. ஒருவர் தெரிவித்தார். (க)

---

## இளைஞர் காங்கிரஸ் ரூ. 27 லட்சம் முடக்கம்

புதுடில்லி, ஏப் 2

இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த சிலர் பாரதத்தின் மூன்று வங்கிகளில் 27லட்சம்ரூபாவை முடக்கி வைத்துள்ளனர் என்று காங்கிரஸ் கட்சி தெரிந்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பணத்தை முடக்கிவைத்தவர்களில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலாலின் மகனும் ஒருவர் என தெரியவந்துள்ளது.

இவ்விவகாரம் பற்றி கட்சி எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றி தெரிவிக்கப்படவில்லை. (உ)

---

## நீதிமன்றமூலம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

கந்தர்மடத்திலுள்ள வீடொன்றில் சுமார் 70,000 ரூபா பெறுமதியான ஜவுளிகளுடன் கைதுசெய்யப்பட்ட 1-ம் சந்தேக நபருக்கு 50,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். சுங்கப்பகுதி அதிகாரி முன்னிலையில் விசாரணை நடைபெற்ற பின்னரே இத்தண்டனை வழங்கப்பட்டது. இரண்டாவது சந்தேக நபருக்கு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் அபராதம் கட்டமறுத்து நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தனர்.

இருவரும் தலா 5000 ரூபா பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க)

---

## பெண் கடத்தல்மோதல்: விளக்க மறியலில் 6 பேர்

நெல்லியடி, ஞாயிறு

தொண்டமானாறில் நடைபெற்ற இளம்பெண் கடத்தல் மோதலையடுத்து ஆறுபேர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலடியில்ஓர்இளம் பெண்ணை அவரது சகோதரர் முறையான ஒருவர் தனது சகாக்களுடன் காரில் கடத்திச்செல்ல முற்பட்டதாகவும் இளம்பெண்ணின் பெற்றோருக்கும் கடத்திச் செல்ல வந்ததாகச் சந்தேகிக்கப்படும் கோஷ்டிக்குமிடையே பலத்தமோதல் ஏற்பட்டது.

இச்சமயம் அங்கு விரைந்த வல்வெட்டித்துறைப் பொலிசார் இளம்பெண்ணைக் கடத்திச் செல்ல வந்ததாகக் கருதப்படும் ஆறு பேரைக் கைது செய்து பருத்தித்துறை நீதவான் அ. கங்காதரன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது சந்தேகநபர்களை இம்மாதம் 29ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான்உத்தரவிட்டார். (அ)

---

## சர்வதேச—

1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை இன்று கொழும்பில் நாட்டிவைத்து அவர் பேசுகையில் மேற்படி பாராட்டை இலங்கைப் பிரதமருக்குத தெரிவித்தார்.

மொரட்டுவவில் உள்ள மேற்கு ஜெர்மன் தொழில் பயிற்சி நிலையத்திற்கு இன்று விஜயம் செய்த திரு. கென்ஸரை நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகாவும் விளையாட்டுத்துறை-போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயகாவும் இ. போ. ச. தலைவர் திரு. ஜே. சி. ரி. கொத்தலாவலையும் வரவேற்றனர்.

இலங்கையின் அபிவிருத்திக்கு மேற்கு ஜெர்மன் அரசு அளித்துவரும் ஒத்துழைப்புக்கு அமைச்சர் திரு. இரத்நாயகா அங்கு நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் நன்றி தெரிவித்தார். (உ)

---

## "இந்த இருதொகுதிகளையும் மறுபரிசீலனை செய்க"

யாழ்ப்பாணம், திங்கள்

திருக்கோணமலை பருத்தித்துறைத் தொகுதிகளுக்கான அபேட்சகர் தெரிவுபற்றி மறுபரிசீலனை செய்யுமாறு கூட்டணி நியமனக்குழுவைக் கோரும் தீர்மானம், கிளிநொச்சித் தமிழ்இளைஞர் பேரவைக் கூட்டத்தில் நிறைவேறியது.

இளைஞர்பேரவைத் தலைவர் திரு. ஐ. திருஞானம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், நியமனக்குழு மக்களின் குரலுக்கு மதிப்புக் கொடுக்காமல் தன்னிச்சையாக அபேட்சகர்களை நியமித்துள்ளதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

முழு நேர கூட்டணி ஊழியராகவும், தனிநாடு இயக்கத்திற்கு முழுமூச்சாகப் பணியாற்றிய, போராட்டத்திற்கு தகுதியுள்ளவர்களையே அபேட்சகர்களாக நியமிப்பது என்ற கூட்டணியின் முந்திய தீர்மானத்திற்கு மாறாகத் தற்போது தேர்தல் நியமனக்குழு இயங்கியிருப்பதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சித் தொகுதிக்கு திரு. வி. ஆனந்தசங்கரியை அபேட்சகராகக் கூட்டணி நியமனக்குழு நியமித்ததை வரவேற்பதாகவும் பேரவை தீர்மானித்தது. (க-அ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in SriLanka.